# சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகள்

★

— ச. அம்பிகைபாகன் —

EVELYN RUTNAM LIBRARY JAFFNA
5/60

To Dr. K. Indrapala
S. Ambikaipakan
2/12/79

# சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகள்

## ச. அம்பிகைபாகன்

இலங்கையில் சர்வகலாசாலை சம்பந்தமான பல பிரச்னைகள் மறுபடியும் இப்பொழுது தலைதூக்கியுள்ளன. இவற்றுக்கெல்லாம் காரணம் இலங்கை, சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான விஷயத்தில் மிகவும் பின்தங்கிய நிலையிலிருப்பதே. ஆரம்பக்கல்வியிலும் நடுநிலைப்பள்ளி உயர்நிலைப்பள்ளி சம்பந்தமான கல்வியிலும் இலங்கை மிக முன்னேறியிருந்த போதிலும், நமது அயல்நாடான இந்தியாவோடு ஒப்பிட்டுப்பார்க்கும் போது சர்வகலாசாலைக் கல்வியைப் பொறுத்தவரை நாம் மிவும், பின்தங்கிய நிலையில் இருக்கிறோம். இந்தியாவில் 1857-ம் ஆண்டிலேயே சென்னை, பம்பாய், கல்கத்தா முதலிய இடங்களில் சர்வகலாசாலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன. ஆனால் நமது நாட்டில் 1921-ம் ஆண்டில்தான் கொழும்பில் முதற் சர்வகலாசாலைக் கல்லூரி (University College) தாபிக்கப்பட்டது. இதுவும் லண்டன் சர்வகலாசாலையோடு இணைக்கப்பட்ட கல்லூரியாகும். ஆனால் யாழ்ப்பாணம் இவ்விஷயத்தில் ஒரு புறநடையாகவிருக்கிறது;

யாழ்ப்பாணத்தில் 1823-ம் ஆண்டிலேயே சர்வகலாசாலை நீர்மையதான ஒரு கல்வித் தாபனம் நிறுவப்பட்டது. நானிங்கு குறிப்பிடுவது அமெரிக்கன் மிஷனரிமாரால் தாபிக்கப்பட்ட செமினறியையே (Batticotta Seminary) இந்தத் தாபனத்தைப் பற்றி நான் விவரிக்கிறதிலும் பார்க்க இதனை 1848-ம் ஆண்டும் பார்வையிட்ட அக்காலத்து கலனியாட்சிச் செயலாளர் (colonial secretary) ஏமேர்சன் ரெனென்ற்(EmesonTennent) கூறியிருப்பதை எடுத்துக் காட்டுவது பொருத்தமென எண்ணி அதனை இங்கு தருகிறேன்.

வட்டுக்கோட்டையிலுள்ள முழுத்தாபனம் மிகுந்த ஆர்வத்தை உண்டுபண்ணும் ஒரு தாபனமாகும். அதன் தோற்றம் மறக்கமுடியாதது. மனதில் ஆழமான பதிவை ஏற்படுத்தத்தக்கது. ஒருபுறம் உயர் கல்விக்குரிய ஒழுங்கு முறைகளும் பொருட்களும் காணப்படுகின்றன. மறுபுறம் மாணவருடைய கவர்ச்சிகரமான தோற்றமும் உடைகளும். அவர்களுடைய உறைவிடங்கள் கீழைத்தேச வாழ்க்கை முறைக்குரிய தனிப்பண்புகளைக் காட்டி நின்றன. உறங்குமறைகள், உணவருந்தும் சாலை, சமையலறை ஆகியவை தூய இந்தியப் பாணியில் இருந்தன. எல்லாம் மிகச் சுத்தமாகக் காணப்பட்டன, இந்த உறை

விடப்பகுதியை விட்டு வெளிச் செல்ல இதைவிட முற்றிலும் வேறுபட்ட தன்மையுடைய தாக நமக்குப் பழக்கமான பண்புகளையுடைய விரிவுரை யறை காட்சியளித்தது. அங்கு வானநூற் கடிகாரம், கோள மண்டலக் கருவி ஆகியவை காணப்பட்டன. ஆய்வுகூடத் தில் இரசாயனப் பொருட்கள், கொள்கலங்கள், மின்காந்தக் கருவி ஆகியவை இருந்தன. நூதனசாலையில் இலங்கையின் புவிச்சரித்திரவியலை விளக்கத் தக்கவகையில் கனிப்பொருட் களும் கடற்பாறை வகைக ளும் ஒழுங்குபடுத்திவைக்கப் பட்டிருந்தன. ஆனால் இவற்றையெல்லாம்விடக் கூடு தலான கவர்ச்சியுடைய இட மாக அமர்ந்தது அரங்கசாலை யாகும். அங்குள்ள வாங்கு களிலே நிரையாக வெண்ணிற ஆடைகளுடனும் தலைப்பாகை களுடனும் ஆவலாகஉட்கார்ந் திருந்தனர் மாணவர்—"கருங் காலியிற் செதுக்கப்பட்ட திருவுருவம்" எங்கள் முன்னிலை யில் நடைபெற்ற பரீட்சை, வரலாறு இயற்கைத்தத்து வம், கண்ணொளியியல், வான நூல், வீச கணிதம் ஆகிய பாடங்களிலே நடைபெற்றது. மாணவர்கள் காட்டிய அறிவு எம்மை அதிசயிக்கச்செய்தது. இங்கு ஊட்டப்படும் கல்வி யையும், வெற்றிகரமான கல்விமுறையையும் எடுத்துக் கொண்டால் வட்டுக்கோட் டையிலுள்ள உயர்கல்வி நிறு வனம் ஐரோப்பிய பல்கலைக் கழகங்கள் பலவற்றுடன் சம மாக வைத்தெண்ண உரிமை உடையது எனலாம். இது வெறும் புகழ்மாலையன்று.' (யாழ்ப்பாண வளாகம் ஆரம் பிக்கப்பட்டபோது வெளி யிடப்பட்ட மலரிலிருந்து எடுக்கப்பட்டது.)

இக்கல்வித்தாபனத்தின் தரத்தை எடுத்துக்காட்டுவ தற்கு இன்னுமொரு விஷயத் தைக்குறிப்பிடவிரும்புகிறேன். 1857-ம் ஆண்டில் சென்னைச் சர்வகலாசாலை தாபிக்கப் பட்டு முதற் பரீட்சை நடை பெற்றபோது, இதில் தேறிய முதலிருமாணவர்களும் யாழ்ப் பாணத்துச் செமினறியில் படித்து வெளியேறியசி வை. தாமோதரம்பிள்ளையும், கறொல் விஸ்வநாதபிள்ளையு மாவர்.

இச்சிறந்த தாபனத்தை கிறிஸ்தசமயத்தைப் பரப்புவ தற்குப் போதிய உதவி புரிய வில்லை என்னுங் காரணத்தால் 1855-ம் ஆண்டில் மிஷனரி மார் மூடிவிட்டனர். இதன் பின்னர் இதுபோன்ற நாட் டுக்கேற்ற உயர் கல்வித் தாப னம் தோன்றவில்லையென்றே கூறவேண்டும். மாணவர் வசித்த இடம் இந்திய பண் பாட்டுக்கேற்றதாயும், அவர்க ளின் உடை தேசிய உடை யாயிருந்ததையும், இங்கு குறிப்பிட வேண்டும்.

## தமிழில் வைத்தியக் கல்வி

மேனாட்டு வைத்திய முறையை முதலில் தமிழில் போதித்த பெருமை டாக்டர் கிறீன் என்னும் அமெரிக்க ரைச் சாரும். டாக்டர் கிறீன் இதற்கென பலவைத்திய நூல் களை தமிழில் எழுதி வெளி யிட்டனர். இவர் தமக்கு வேண்டிய கலைச் சொற்களை எவ்வாறு தமிழில் ஆக்கிக் கொண்டார் என்பது இன் றும் ஆராயப்படவில்லை. யாழ்ப்பாணத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்ட வைத்திய பீடம் இத்துறையில் ஈடுபட் டால் இவர்களுக்கும்- இவர் கள் தமிழில் வைத்தியக் கல் வியைப் போதிக்க வேண்டி யிருப்பதால் நாட்டுக்கும் பிர யோசனமாயிருக்கும். யாழ்ப் பாணக் கல்லூரிக்கு விஜயம்

செய்த பொழுது தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் கிறீன் தமிழுக்கு ஆற்றிய சேவையை விரிவாக ஆராய வேண்டிய அவசியத்தை எடுத்துக் காட்டினார்.

## சர்வகலாசாலைக் கல்லூரி

1921-ம் ஆண்டில் சர்வ கலாசாலைக் கல்லூரி தாபிக்கப்படும் வரையில் உயர்கல்வி பெற விரும்பிய இலங்கையரில் வசதிபடைத்தோர் இங்கிலாந்து இந்தியா முதலிய நாடுகளுக்குச் சென்று கல்வி கற்றனர். நாங்கள் கல்லூரியில் படித்த காலத்தில் எங்களுக்கு ஆசிரியர்களாயிருந்தவர்களிற் பெரும் பாலானோர் இந்தியாவில் கல்விகற்றுப் பட்டம் பெற்றவராவர்.

அரசியல் விடுதலைக்குப்போல், இலங்கையில் ஒரு சர்வகலாசாலை தாபிக்கப்பட வேண்டுமென்ற கிளர்ச்சிக்குத் தலைவராக விளங்கியவர் சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்களே. அவர்கள் செய்த பிரசாரத்தின் பயனாக 1906ம் ஆண்டில் இலங்கைச் சர்வ கலாசாலைச் சங்கம் தாபிக்கப்பட்டது. பல இனத்தவர்களைக் கொண்ட இச்சங்கத்துக்கு சேர். பொன் அருணாசலம் அவர்களே தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இச் சங்கத்தின் முயற்சியினாலேயே 1921ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலைக் கல்லூரி தாபிக்கப்பட்டது. இச்சங்கம் ஒரு சஞ்சிகையையும் நடாத்தி வந்தது. இச் சஞ்சிகையின் இதழ்கள் இலங்கையில் கல்வி வளர்ச்சியை அறிவதற்கு மிகவும் பிரயோசனமுள்ளதாகக் காணப்படுகிறது.

இலங்கைச் சர்வகலாசாலை நிர்வாகத்தில் சேர். அருணாசலம் பெரும் பங்கெடுத்தார். இப்பொழுது பேராதனை வளாகத்தில் காணப்படும் பெரும் நூல் நிலையத்துக்கு வித்திட்டவர் இவரே அகால மரணமடைந்த தமது மகன் பத்மநாபா பெயரால் அவர் சேகரித்துவைத்திருந்த நூல்களை சர்வகலாசாலைக் கல்லூரிக்கு அன்பளிப்புச் செய்தார்.

இக் கல்லூரி லண்டன் சர்வகலாசாலையோடு இணைக்கப் பெற்றிருந்தபடியால் இலங்கைக்கேற்ற ஒரு பாடத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர முடியவில்லை- ஆனால் இங்கு சிறந்த பேராசிரியர்கள் கடமையாற்றினர். பேராசிரியர் மாரிஸ் (Marrs) என்பவர் அதிபராயிருந்தார். ஆங்கிலமே போதனா மொழியாகவிருந்தபடியால் மாணவர் இன, சமய பேதமில்லாமல் பழகிக் கொண்டனர். இக் கல்லூரி மாணவர்கள் பலர்விடுதிச்சாலைகளில்வசித்து வந்தனர் இவற்றுள் யூனியன் விடுதிச்சாலை மிகவும் பிரசித்தி பெற்றது இங்கு பல இன, சாதி, சமயத்தைச் சேர்ந்தவர்கள் அன்னியோன்னியமாக வாழ்ந்து வந்தனர். இவ்விடுதிச் சாலைக்கு பேராசிரியர் சுந்தரலிங்கம் மேற்பார்வையாளராக விருந்தார். இவர் சங்கடங்களில் மாட்டிக் கொள்ளும் மாணவரை மீட்பதிலும் வசதி குறைந்த மாணவருக்கு உதவி செய்வதிலும் முன்னின்று சகல மாணவரின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்

இக்கல்லூரி இலங்கைச் சர்வகலாசாலை தாபிக்கும் வரைக்கும் ஒரு தற்காலிக ஒழுங்காகவே கருதப்பட்டது. சர்வகலாசாலைச் சங்கம் தொடர்ந்து செய்த வாத பிரசாரம் காரணமாகவும், கல்லூரி நிர்வாக சபை எடுத்த முயற்சியினாலும் அரசாங்கம் 1924-ம் ஆண்டு

கொழும்பு புல்லேர்ஸ் வீதியி லுள்ள (Buller's Road)இடத்தில் சர்வகலாசாலை நிறுவ முடிவுசெய்து இதற்கென ரூபா 3,000,000 ஒதுக்கியது பேராசிரியர் மார்ஸ் சர்வகலாசாலை அமைப்பதற்கு வேண்டிய சட்டங்களையும் பிரமாணங்களையும் தயார்செய்தார். இச் சந்தர்ப்பத்தில் எதிர்பாராத முறையில் ஒரு புதுப் பிரச்னை எழுந்தது அரசியல் தலைவர்களில் ஒரு சாரார் சர்வகலாசாலையை கண்டியில் அமைக்க வேண்டுமெனக் கிளர்ச்சிசெய்தனர். இவ்விஷயம் மறுபடியும் சட்ட நிருபண சபையில் விவாதத்துக்கு எடுக்கப்பட்டது. இது பற்றி அடுத்துக் கவனிப்பாம்.

## தீர்க்கதரிசியின் கூற்று

சர்வகலாசாலை பற்றிச் சட்ட நிருபணசபையில் 1927 ஆம் ஆண்டில் நடந்த விவாதம் அரசாங்கத்தால் நீதியரசர் அக்பார் தலைமையில் நியமிக்கப்பட்ட குழுவின் சிபார்சின் அடிப்படையில் நடைபெற்றது. அக்பார் பின் வருவனவற்றைச் சட்ட நிருபண சபையில் பிரேரித்தார்.

1. சர்வகலாசாலை கண்டியில் தும்பறு பள்ளத்தாக்கில் தாபிக்கப்பட வேண்டும்.

2. இச் சர்வகலாசாலை ஒரே ஒரு போதனு பீடத்தைக் கொண்டதாய் (Unitary) இருக்கவேண்டும்.

3. சகல மாணவரும் சர்வகலாசாலையில் வசித்துப் (Residenttal) படிக்க வேண்டும்.

மேற்படி பிரேரணைகளை எதிர்த்துப் பேசியவர்களில் சேர். பொன்னம்பலம் இராமநாதன் முக்கியமானவர்; அவர் கொழும்பில்தான் சர்வகலாசாலை நிறுவப்பட வேண்டுமென்னும் கட்சியை ஆதரித்து ஆற்றிய உரை அவரின் சொல் வன்மைக்கும், நுண்மாண் நுழைபுலத்துக்கும் சர்வகலாசாலை விஷயங்களில் அவருக்கிருந்த அறிவுக்கும் ஒரு சிறந்த எடுத்துக் காட்டாக விளங்குகிறது. கண்டியில் ஏற்படுத்தப்படும் ஒரே ஒரு சர்வகலாசாலையால், அதுவும் மாணவா அங்கேயே வசித்துப் படிக்கவேண்டுமென்னும் நிபந்தனையோடு கூடிய சர்வகலாசாலையால், இலங்கையின் உயர்கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாதென்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டினர். அவர்களின் அன்றைய கூற்று ஒரு தீர்க்கதரிசியின் கூற்றாக விளங்குகிறது. இராமநாதன் பேச்சின் விபரங்களை அறிய விரும்புவோர் திரு. எம். வைத்திலிங்கம் எழுதிய இராமநாதன் சரித்திரத்தின் இரண்டாம் பாகத்தை (பக்கங்கள் 617—645) படித்துப் பார்க்கவும்.

## சுவாமி விபுலாநந்தர் கருத்து

இச் சந்தர்ப்பத்தில் இவ் விஷயமாக சுவாமி விபுலாநந்தர் எழுதியவற்றில் ஒரு பகுதியை இங்கு தருகின்றேன். "உயர்தரப் பாடசாலைகள் பல கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் குழுமியிருக்கின்றன. ஆதலால் இவ்விரண்டினுள் ஒன்றே சர்வகலாசாலையின் பூரண நலத்தைப் பெறுவதற்குத் தகுதியுடையதென்பது சிலருடைய அபிப்பிராயம், தும்பறையில் சர்வகலாசாலை ஏற்படினும் குறித்த இரு நகரங்களிலும் இப்பொழுது நடந்து வருகின்ற கல்வி முயற்சி குறை

யாதிருக்க வேண்டுமென்பது கல்வி முயற்சியில் ஈடுபட்டோரது கோரிக்கை-தொன்று தொட்டுக் கல்வி வளஞ் சிறந்து விளங்கிய யாழ்ப்பாணத்தைப் புறக்கணித்து கல்வி மணமில்லாத தும்பறையை நாடிச் செல்வது அவலே நினைத்து உரலே இடித்தது போலாகுமன்றே. (விபுலாநந்தர் உள்ளம். பக்கங்கள்: 53-55)

இவர்கள் அறிவுரையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கு போலாயிற்று. கண்டியை ஆதரித்த கட்சியே வெற்றிபெற்றது. கண்டியில் சர்வகலாசாலையை தாபிப்பதற்கு பல ஆண்டுகளெடுத்தன. தும்பறைப் பள்ளத்தாக்கு ஏற்றஇடமில்லையெனக் கருதபபட்டதால் பேராதனையில் இதற்கென ஒரு விஸ்தீரமான இடம் எடுக்கபபட்டது.

## ஐவர் ஜென்னிங்ஸ் உபவேந்தர்

1939ம் ஆண்டில் சர்வகலாசாலைக் கல்லூரிக்கு அதிபராயிருந்த பேராசிரியர் மாாஸ் இளைப்பாறினர். இவரிடத்துக்கு டாக்டர் ஐவர் ஜென்னிங்ஸ் (Dr.Ivor Jennings) நியமிக்கப்பட்டார். இவர் கேம்பிறிஜ் சாவகலாசாலையில் படித்துப் பட்டம் பெற்றவர். அரசியல் சட்டத்துறையில் (Constitutional Law) உலகப் புகழ் பெற்றவர். லண்டன் சர்வகலாசாலையிலிருந்து சட்டத்துறையில் உயர்பட்டம் (L. L. D) பெற்றவர். ஒக்ஸ்வொட், கேமபிறிஜ் சர்வகலாசாலைகள் இங்கிலாந்தின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் லண்டன் சர்வகலாசாலை தோன்றியது. அறுபதுக்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்கள் லண்டன் சர்வகலாசாலையோடு இணைக்கப்பட்டிருப்பதாக (Affiliated) ஒரு நூலில் (Redbrick University) கூறப்பட்டுள்ளது. இதற்கு மேலாக வெளிமாணவரும் பரீட்சைக்கு தோற்றக்கூடிய வசதியைச் செய்து கொடுத்திருந்தது. இதனால் தொழில்களில் ஈடுபட்டிருப்போரும் தாமாகப் படித்துப்பட்டம் பெறக்கூடிய வசதியிருந்தது. இந்த வசதியைப் பயன்படுத்தி இலங்கையிலிருந்தும்பலர் லண்டன் பரீட்சைகள் தோன்றி பட்டதாரிகளானார்கள். இலங்கையின் உயர் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடிய லண்டன் சர்வகலாசாலைபோன்ற ஒரு சர்வகலாசாலையை நிறுவுவதற்கு ஆலோசனை கூறுமல், ஒக்ஸ்வோட், கேம்பிறிஜ் போன்ற ஒரு சிலருக்கே உதவக் கூடிய ஒரு சர்வகலாசாலையை அமைப்பதற்கு ஐவர் ஜென்னிங்ஸ் உடந்தையாயிருந்தது. வருந்துதற்குரியது.

1941-ம் ஆண்டில் உலக யுத்தம் தோடங்கியதால் இலங்கையில் லண்டன் பரீட்சைகள் நடத்துவதற்கு கஷ்டங்கள் ஏற்பட்டன ஆகவே 1942-ம் ஆண்டில் இலங்கைச் சர்வகலாசாலை ஆரம்பிக்கப்பட்டது பேராதனையில் கட்டிடங்கள் அமையும்வரையும் கொழும்பிலிருந்தே சர்வகலாசாலை இயங்கிவந்தது. ஐவர் ஜென்னிங்ஸ் முதல் உபவேந்தராவர்.

## பேராதனையில் சர்வகலாசாலை

சர்வகலாசாலைக்கென பேராதனையில் 1700 ஏக்கர் நிலம் பெறப்பட்டது. இதில் 320 ஏக்கர் நிலத்தை திருத்தி அதில் கட்டிடங்கள் அமைக்

கப்பட்டன, விடுதிச்சாலைகளெல்லாம் மேல்நாட்டுப் பாணியில் அமைக்கப்பெற்றன. முதலில் இங்கு 1000 மாணவர்க்கெனத் திட்டம் போடப்பட்டது. பின்னர் இது 4000 மாணவருக்கென திருத்தப்பட்டது. இங்கு அமைக்கப்பட்ட கட்டிடங்களுக்குக் கோடிக்கணக்கில் பணஞ் செலவழிக்கப்பட்டது. இப்பணத்தை இராமநாதன் போன்றோரின் புத்திமதியின் படி கொழும்பு யாழ்ப்பாணம் முதலிய இடங்களில் சர்வகலாசாலைக் கல்லூரிகள் தாபிப்பதற்குச் செலவழிக்கப்பட்டிருந்தால் பிற்காலத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கா.

1948ம் ஆண்டில் பேராதனையில் ஒரு பகுதிக் கட்டிடம் முடிவெய்திய படியால் சட்டம், விசாயம், விலங்கியல் முதலிய துறைகள் இங்கு மாற்றப்பட்டன. 1952 ம் ஆண்டில் கலை, கீழைத்தேச பண்பியல்துறைகளும் மாற்றப்பட்டன. விஞ்ஞானத்துறையில் எதிர்பார்த்ததிலும் பார்க்க அதிகமாணவரைச் சேர்க்க வேண்டியிருந்தபடியால், கொழும்பிலிருந்த விஞ்ஞானத்துறை பேராதனைக்கு மாற்றப்படவில்லை. புதிதாகச் சேரும் மாணவர்களில் ஒரு பகுதியினர் பேராதனையில் சேர்க்கப்பட்டனர். வைத்தியக் கல்லூரியும் விஞ்ஞான பீடத்தின் ஒரு பகுதியும் பொறியியல் கல்லூரியும் கொழும்பில் இயங்கின. ஆரம்பத்திலேயே ஒரு போதனா பீடம் என்ற திட்டமும் மாணவரெல்லோரும் சர்வகலாசாலையிலேயே வசிக்க வேண்டுமென்னும் திட்டமும் தோல்வியடைந்தன.

## புரட்சிகரமான மாற்றங்கள்

இலங்கையில் சர்வகலாசாலை ஏற்பட்ட காலத்தில் நாட்டில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. டொனமூர் அரசியலின் கீழ் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டு எல்லோரும் இந்நாட்டு மன்னரானார். இதனால் மக்கள் மத்தியில் பெரும் விழிப்பேற்பட்டது. மேல் வகுப்பினருக்கு ஏகபோக உரிமையாகவிருந்த உயர்கல்வி, மருத்துவ வசதி முதலியவற்றைச் சகலருக்கும் கிடைக்கக்கூடிய முறையில் அரசாங்கம் நடவடிக்கைகள் எடுத்தது. 1945-ம் ஆண்டு இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்தது. இதனைத் தொடர்ந்து தேசிய மொழிகளான சிங்களமும், தமிழும் போதனா மொழிகளாயின. இவையிரண்டும் கல்வித் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள்.

இலவசக்கல்வி நடைமுறைக்கு வருமுன் இலங்கைச் சர்வகலாசாலைக்குச் சென்ற மாணவர் பெரும்பாலும் நகர்ப்புறங்களிலிருந்தே சென்றனர். ஏனெனில் அவ்விடங்களில் உயர்நிலைப்பள்ளிகள் (Secondary Schools) இருந்தன. இலவசக்கல்வி வந்தபின் நாட்டுப்புறங்களிலும் உயர்நிலைப்பள்ளிகள் ஏற்படலாயின.

இலவசக்கல்வி நடைமுறைக்கு வந்தபின் யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி வளர்ந்தது போல் இலங்கையின் மறுபாகங்களில் வளர்ச்சியடையவில்லை. 1945-ம் ஆண்டு தொடக்கம் அரசாங்கம் பள்ளிக்கூடங்களைப் பொறுப்பெடுத்த 1961-ம் ஆண்டு

வரைக்குமுள்ள காலம் யாழ்ப்பாணக் கல்விச்சரித்திரத்தில் ஒரு பொற்காலமெனலாம். அக்காலத்திலேதான் யாழ்ப்பாணத்தில்கிராமங்களிலுள்ள சிறு ஆங்கிலப் பாடசாலைகளெல்லாம் பெருங்கல்லூரிகளாயின. இக்கல்லூரிகளில் எல்லாம் விஞ்ஞான கூடங்கள், நூலகங்கள், விளையாட்டு மைதானங்கள் முதலிய வசதிகள் ஏற்படலாயின. இவ் வளர்ச்சியெல்லாம் பெற்றோர், ஆசிரியர், பழைய மாணவர் முதலியோரின் பெரும் முயற்சியினாலேயே ஏற்பட்டன. அரசாங்கத்தின் உதவியில்லாமலே இவையெல்லாம் நடைபெற்றன. மந்திரி சிறில் மதியூ (Cyril Mathew) கூறியதுபோல யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானகூடம் முதலிய வசதிகளைக் கொண்ட 34 கல்லூரிகளிருக்கிறதென்றால் மக்கள் முயற்சியால் இவை பெறப்பட்டதென்பதைச் சகலரும் அறிந்துகொள்வது நலம்.

## தெற்கில் வளர்ச்சியில்லை

யாழ்ப்பாணத்தைப் போல் தென்னிலங்கையில் கல்வி வளர்ச்சியடையவில்லை. இலவசக்கல்வி வந்ததன்பின் அங்கு போதியளவு விஞ்ஞானக் கல்வி வளர்ச்சியடையவில்லை. சிங்களம் போதனமொழியாக வருமுன் விஞ்ஞானக்கல்வியை சிங்களப் பள்ளிக்கூடங்களில் போதித்தவர்களில் அநேகர் தமிழர். சிங்களம் போதனமொழியானதும் இவர்களின் சேவையைப் பெறமுடியாமல் போனது ஒரு காரணம். மக்களின் ஆர்வக்குறைவு மறு காரணம். இதனால் அங்கு உயர்கல்வியைப் பெற விரும்பிய மாணவர்கள் கலைப் பாடங்களையே படிக்க நேர்ந்தது. இதன் விளைவாகத் தென்னிலங்கையிலிருந்து சர்வகலாசாலைக்குச் சென்ற மாணவர் பலர் கலைப்பகுதியிலேயே சேரவேண்டியிருந்தது. இதன் விளைவைப் பின்னர் கவனிப்போம்

சிங்களமும், தமிழும் போதனமொழிகளாகவிருந்தபடியால் சிங்கள மாணவரும் தமிழ் மாணவரும் முன்பு போல் ஒன்றாகப் படிக்கும் வாய்ப்பினை இழந்தனர். மேலும் நாட்டுப்புறங்களிலிருந்து வந்த மாணவருக்கு ஆங்கில அறிவு குறைவாயிருந்தபடியால், சர்வகலாசாலைக் கல்லூரிக் (University college) காலத்தில்போல் சிங்கள மாணவரும் தமிழ் மாணவரும் அன்னியோன்யமாகப் பழகும் வாய்ப்பையிழந்தனர். எனவே பேராதனைச் சர்வகலாசாலை இன ஒற்றுமையை வளர்ப்பதற்குப் பதிலாக இன வேற்றுமையை வளர்க்குமிடமாக மாறியது.

யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்தப்பட்ட கல்வி வசதிகள் காரணமாகவும், மாணவர் கல்வியில் கொண்ட ஊக்கம் காரணமாகவும் கணிசமான அளவு தமிழ் மாணவர் பேராதனைச் சர்வகலாசாலையில் விஞ்ஞானம், வைத்தியம், பொறியியல் முதலிய துறைகளில் சேர்ந்தனர். இதனைப் பொறுத சிங்களத் தலைவர்களிற் சிலர் தமிழ் மாணவரின் தொகையைக் குறைப்பதற்கு வழிவகை எடுத்தனர். அக்காலத்தில் அரசாங்கம் தேசிய மொழிகளில் உயர் கல்வி புகட்டுவது பற்றி ஆராய்ந்து ஆலோசனை கூறுவதற்கு ஓர் ஆலோசனைச் சபையை நியமித்தது. அக்குழு கூறிய ஆலோசனைகளில்பின்வருவதும் ஒன்றாகும்.

"மேலும் சமூகங்களின் சிறப்புகளுக்கேற்ப உயர்தரக் கல்வி அளிப்பது உகந்ததாகையால் சிங்களப் பல்கலைக்கழகங்களும், தமிழ்ப் பல்கலைக்கழகங்களும் அமைத்தல் தேவையாகிறது. அப்பொழுதுதான் பல்கலைக்கழகத்தில் பயிலும் ஒவ்வொரு தமிழ் மாணவனுக்கும் ஆறு சிங்கள மாணவர் பயிலுதல் முடியும்."

மேலே கூறப்பட்ட ஆலோசனையின்படி, மாணவரின் திறமையை நோக்காது, சனத்தொகையின் அடிப்படையில் மாணவர் உயர்கல்விக்கு அனுமதிக்கப்படுவர்.

இவ்வாலோசனையை அரசாங்கம் ஏற்காதுவிட்டாலும் சில சிங்களத் தலைவர்களின் மனப்பான்மையை இது நன்கு காட்டுகிறது.

## தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம்

மேலே எடுத்துக்காட்டப்பட்ட சூழ்நிலையில்தான் தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1956-ம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வியக்கத்தோடு அக்காலத்திலிருந்த தமிழ்த்தலைவர்கள், பேராசிரியர்கள், வைத்தியகலாநிதிகள், சட்டமேதைகள் சம்பந்தப்பட்டிருந்தனர். இவ்வியக்கத்துக்குத் தலைவராக சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமியிருந்தார். உத்தியோகத்தராய்ப் பலரிருந்தபோதிலும், இவ்வியக்கத்துக்கு உயிர்நாடியாய் விளங்கியவர்கள் பேராசிரியர் மயில்வாகனம், பேராசிரியர் சின்னத்தம்பி, சட்டமேதை திருச்செல்வம் முதலியோர் ஆவர். பேராசிரியர் மயில்வாகனம் "தமிழ்பேசும் மக்களுக்கு ஒரு பல்கலைக்கழகம்" என்னும் ஒரு பிரசுரத்தை 1957-ம் ஆண்டு எழுதி வெளியிட்டார். அதில் இவ்வியக்கம் தோன்றிய வரலாற்றைப் பின்வருமாறு கூறுகிறார்.

"தமிழ்ப் பல்கலைக்கழக இயக்கம் 1956-ம் ஆண்டு ஆனிமாதம் செயலாற்றத் தொடங்கியது. தமிழ் பேசும் மக்கள் வரலாற்றில் இம்மாதம் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய மாதமாகும். தமிழ் பேசும் மக்கள் தமது இதிகாசத்தையும், பண்பாட்டையும், மொழியையும் பாதுகாக்க உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளாது விடின் அவற்றை முற்றாக இழந்துவிடுவர் என்ற எண்ணம் துவக்கமுற்ற காலம் அது.

"அந்நாட்களில் தமிழ்பேசும் மக்களின் எதிர்காலத்தை நன்கு ஆராய்ந்த ஒரு சில தமிழ் அன்பர்கள் தமிழ் பேசும் தமது தொழிற் சக்தியைப் பெருக்கவும், தமது பண்பாடு, மொழி ஆகியவற்றைப் பேணவும் வேண்டுமாயின், தமக்கென ஒரு பல்கலைக்கழகத்தைப் பெற்றிருத்தல் அவசியமென உணர்ந்தனர். அவர்களின் உணர்வின் வெளிப்பாடே பல்கலைக்கழக இயக்கமாகும்."

தமிழ் மாணவர் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் சேர்வதற்குப்படும் கஷ்டத்தையும், இதனால் 1500 தமிழ் மாணவர் இந்தியாவில் படித்துவருவதையும் எடுத்துக்காட்டிவிட்டு, பேராதனையில் தமிழ் மாணவர் நிலையைப்பின் வருமாறு வர்ணிக்கிறார் பேராசிரியர் மயில்வாகனம். "ஒருவாறாகப் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் இடம்பெற்ற மாணவர்களின் நிலையென்ன? நாளடைவில் தமிழ் மாணவர் காண்பதென்ன? தமக்

சூழ்நிலையில் ஏதோ வெறுக்கப்பட்டவர்கள் போல அவர்கள் வாழ்க்கை அமைந்துள்ளது. பேராதனையிலுள்ள தமிழர் நிலை வருடாவருடம் சீரழிந்து வருகிறதென்பது கண்கூடு. இந்நிலை மாணவருக்கு மட்டும் உரியதல்ல. ஆசிரியர்களையும் பாதித்துள்ளது''

இவ்வியக்கத்துக்கு சிலகாலம் பிரசாரம்வெகுதிவிரமாகநடைபெற்றது. பொருளும் சேர்க்கப்பட்டது. ஆனால் செயலில் அதிகம் இறங்கியதாகத் தெரியவில்லை. இவ்வியக்கத்தின் ஆதரவில் கொழும்பில் நாவலர் நிலையம் (Navalar Hall) என்னும் நிறுவனம் சிலகாலம் நடைபெற்றது. பல பரீட்சைகளுக்கு ஆயத்தம் செய்யும் மாணவர்களுக்கு இது உதவியது.

பின்னர் பல்வேறு தொழில்களைப் போதிப்பதற்கென உப்புவெளியில் சில ஏக்கர் நிலம் வாங்கப்பட்டு ஒரு கட்டிடமும் போடப்பட்டது. இவ்விடமே தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் எடுத்த முயற்சிக்கு ஒரு சின்னமாக இப்பொழுது விளங்குகிறது.

## கலாச்சாரப் பல்கலைக் கழகம்

1958-ம் ஆண்டு பண்டாரநாயக்கா அரசாங்கம் வித்தியாலங்கார வித்தியோதய பிரிவேனுக்களை கலாச்சாரப் பல்கலைக்கழகங்களாக மாற்றி அமைத்தது. இதனால் பண்டாரநாயக்கா பௌத்த கலாச்சார வளர்ச்சிக்கு உதவுவதாகக் கருதினர். ஆனால் இவ்விரு நிறுவனங்களும் படிப்படியாக அவற்றின் தனித்தன்மையை இழந்து மறு சர்வகலாசாலைகள் போலாயின. இப்பொழுது அவர்களின் பெயர்களுமே களனி (கல்யாணி) பல்கலைக் கழகமென்றும், ஜெயவர்த்தன புர பல்கலைக்கழகமென்றும் மாற்றப்பட்டுள்ளன.

பௌத்தர்களுக்கென இரு கலாச்சார பல்கலைக் கழகங்கல் நிறுவப்பட்ட சமயத்தில் இவைபோன்று இந்துக்களுக்கும், முஸ்லிம்களுக்கும் கலாசாரப் பல்கலைக் கழகங்களைத் தாபிக்கப் பண்டாரநாயக்கா சம்மதம் தெரிவித்தார். இந்தக் கட்டத்தில்தான் காலஞ்சென்ற கலாநிதி சு. நடேசபிள்ளை இந்துப் பல்கலைக் கழகம் தாபிப்பதற்குப் பரமேஸ்வராக் கல்லூரியையும் இராமநாதன் கல்லூரியையும் அவற்றுக்குரிய சொத்துக்களையும் கொடுக்க முன் வந்தார். இதனை இந்துக்கல்லூரிகளின் அதிபர்களும், முகாமையாளரும் இந்துசமயத் தலைவர்களும் வரவேற்றனர். ஆனால் அக்காலத்தில் செல்வாக்குப் பெற்றிருந்த அரசியல் கட்சி இதற்கு எதிர்ப்பையத் தெரிவித்தது. இதனால் இந்துப் பல்கலைக்கழகம் நிறுவப்படவில்லை.

இந்துப் பல்கலைக் கழகத்தை ஆதரித்தவர்கள் அது காலகதியில் ஒரு பூரண பல்கலைக் கழகமாகுமென்று தெரிந்தே ஆதரித்தனர். இந்துப் பல்கலைக் கழகம் நிறுவப்பட்டிருந்தால், இப்பொழுது அது வித்யாலங்கார வித்தியோதய பல்கலைக்கழகங்களை போல் வளர்ச்சியுற்று ஒரு பூரண பல்கலைக் கழகமாக விளங்கும். தமிழர் இழந்த அரிய சந்தர்ப்பங்களில் [Lost Opportunities[ இதுவுமொன்றாகும்.

கனவு நனவாகிறது

1958-ம் ஆண்டு தொடக்கம் இலங்கைச் சர்வகலாசாலை சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து ஆலோசனைகள் கூறுவதற்குப் பல விசாரணைச் சபைகள் நிறுவப்பட்டன. இவ் விசாரணைச் சபைகளுக்குச் செலவான பணம் பெரும்பாலும் வீண் செலவாயிற்று. ஏனெனில் இச்சபைகளின் ஆலோசனைகளை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. 1958-ம் ஆண்டு டாக்டர் யோசெவ் நீட்காம் (Dr. Joseph, Needham F. R, S.) தலைமையில் சர்வகலாசாலைக் கல்வி சம்பந்தமான பிரச்னைகளை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி ஒரு விசாரணைச் சபை நியமிக்கப்பட்டது. அங்கத்தவராக ராஜஸ்தான் சர்வகலாசாலை உபவேந்தர் டாக்டர் சட்டர்ஜியும், எஸ். ஜே. டி. எஸ். செனிவரத்னவும் நியமிக்கப்பட்டனர். டாக்டர் நீட்காம் கேம்பிறிச் சர்வகலாசாலையைச் சேர்ந்த புகழ்பெற்ற கல்விமான். சீனாவைப் பற்றிச் சிறந்த ஆராய்ச்சி செய்து பல நூல்கள் எழுதியவர். ஆகவே கீழைத்தேசங்களின் பண்பாட்டை நன்கறிந்திருந்தனர். எனவே இவரைத் தலைவராகப் பெற்றது பெரும்பேறாகும். இவ் விசாரணைச்சபைக்கு பலர் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். இவற்றுள் இந்துக் கல்லூரிகளோடு சம்பந்தப்பட்டவர்கள் சமர்ப்பித்த அறிக்கை முக்கியமானதொன்றாகும். அதிலிருந்து சில பகுதிகளை இங்கு தருகிறேன்.

"சர்வகலாசாலைக் கல்விக்குத் தகுந்தவரென்று நாம் கருதுபவர்களில் மிகச் சிலரே இலங்கைச் சர்வகலாசாலையில் இடம்பெறுகின்றனர். இலங்கையிலிருந்து ஏறக்குறைய 2,000 மாணவர் இந்தியாவில் கல்வி பயின்றுவருகின்றனர். இவர்களில் பெரும்பாலோர் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றவர்களே.

யாழ்ப்பாணத்து மாணவர் தமக்கேற்ற சூழ்நிலையில் சர்வகலாசாலைக் கல்வி பெறுவதற்கு வசதி செய்துகொடுக்கவேண்டியது அவசியமாகும். இலங்கையில் கல்வியைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணம் ஒரு கேந்திரத்தானமாகும். சர்வகலாசாலைப் பிரவேசத்துக்கு மாணவரைப் பயிற்றும் கல்லூரிகள் பல இங்குள. மேலும் சர்வகலாசாலையைத் தாபிப்பதற்கு வேண்டிய வசதிகள் யாழ்ப்பாணத்திலுள. பட்டதாரி ஆசிரியர்களைப் பயிற்றுவதற்குப் பலாலியிலுள்ள ஆசிரிய கலாசாலையை உபயோகப்படுத்தலாம். பொறியியல் துறையை கொக்குவிலில் கட்டப்பட்டுவரும் தொழில்நுட்பக் கல்லூரியில் அமைக்கலாம். திருநெல்வேலியிலுள்ள அரசினர் விவசாயப் பண்ணை விவசாயத்துறையை அமைப்பதற்கு ஏற்ற இடமாகும். யாழ்ப்பாண அரசாங்க வைத்தியசாலையோடு சேர்த்து மருத்துவபீடத்தை அமைக்கலாம்.

இலங்கையில் தமிழ்ப்பண்பாட்டுக்கும், சைவசமயத்துக்கும் யாழ்ப்பாணம் இருப்பிடமாகும். இவற்றைப் போதிப்பதற்கும், இவற்றைப்பற்றி ஆராய்ச்சி செய்வதற்கும் இலங்கைச் சர்வகலாசாலையில் போதிய வசதி செய்துகொடுக்கப்படவில்லை. இவற்றை

விருத்தி செய்வதற்கு யாழ்ப்பாணமே சிறந்த இடமாகும்.''

நீட்காம் கமிஷனின் அறிக்கையைப் படிப்போருக்கு மேற்கூறிய அறிக்கை அவர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறதென்பதைக் காணலாம். இப்பொழுது யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலை அமைந்துவரும் முறையைப் பார்த்தால் யாழ்ப்பாணக் கல்விமான்கள் கண்ட கனவு நனவாகிவருவதைக் காணலாம். ஆனால் இதற்கேற்பட்ட தடைகளும் தத்துக்களும் எண்ணில. அக்கதை பாரதக் கதைபோல நீண்டதாகும்.

மேற்படி அறிக்கைக்கு சு. நடேசபிள்ளை (முகாமையாளர் பரமேஸ்வர இராமநாதன், மகாஜனக் கல்லூரிகள்), த முத்துசாமிப்பிள்ளை (முகாமையாளர் யாழ்ப்பாணம், கொக்குவில் சாவகச்சேரி, காரைநகர் இந்துக் கல்லூரிகள்), டாக்டர் எஸ். சுப்பிரமணியம், முகாமையாளர் ஸ்கந்தவரோதயக் கல்லூரி), கே. முத்துவேலுப் பிள்ளை (அதிபர், மானிப்பாய் இந்துக் கல்லூரி), ச. அம்பிகைபாகன் (அதிபர் இராமகிருஷ்ணமிஷன் வைத்தீஸ்வர வித்தியாலயம்) முதலியோர் கையொப்பமிட்டிருந்தனர்.

## கமிஷன் ஆலோசனைகள்

முன்பெடுத்துக்காட்டப் பட்டதுபோல் வெளி நாட்டு அங்கத்தவர்கள் இருவரும் சிறந்த கல்விமான்கள். இவர்களுடைய ஆலோசனைகள் இலங்கையரான மூன்றும் அங்கத்தவர் செனிவரத்தின ஏற்கவில்லை. இருவர் சமர்ப்பித்த அறிக்கைக்கு இவர் கையொப்பமிடாமல், அவ்வறிக்கையில் கூறப்பட்டிருக்கும் ஆலோசனைகள் பற்றி தமது குறிப்புக்களைப் பிறிம்பாக எழுதியுள்ளார். இவையெல்லாம் இன அடிப்படையில் அமைந்துள்ளன. இப்பொழுது மிகவும் காரசாரமாக விவாதிக்கப்படும் மாணவரைச் சர்வகலாசாலைக்கு அனுமதிக்கப்படும் முறை. பரீட்சைகளில் இன மொழி அடிப்படையில் சலுகைகள் காட்டப்படுகின்றன என்பன போன்ற பல் வேறு விஷயங்கள்பற்றிக் கருத்துக்கள் கமிஷன் முன் சமர்ப்பிக்கப்பட்டன. இவை பற்றியும் கமிஷனர்கள் தங்கள் ஆலோசனையைத்தெரிவித்துள்ளனர். அவற்றில் முக்கியமான சிலவற்றை இங்கு தருகின்றேன்.

1. சர்வகலாசாலைக் கல்வியை அதனைப்பெறத்தகுதியுடையோர் எல்லோருக்கும் இயன்றவரையில் கிடைக்கத் தக்கதாக வழிவகைகள் எடுக்க வேண்டும். திறமையுள்ளவர்களுக்கு(Intellectualelite) மாத்திரம் கல்விகொடுப்பதன்மூலம் ஒரு சர்வகலாசாலை தனது கடமையைச் செய்துவிட்டதாகக் கருதமுடியாது. (பந்தி 15)

2. சர்வகலாசாலைக்கு மாணவரை இன, பிரதேச அடிப்படையில் அனுமதிப்பதை நம்மால் அங்கீகரிக்க முடியாது. நமது ஆலோசனைப்படி கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் வளாகங்கள் ஏற்பட்டால் தகுதியுடைய மாணவருக்கு அனுமதி கிடைக்கக் கூடியதாயிருக்கும். (பந்தி 405, 411, 680)

3. எல்லோரும் விடுதிகளில் வசிக்க வேண்டுமென்று கட்

டாயப்படுத்துவதை நாம் விரும்பவில்லை. கொழும்பி லும், யாழ்ப்பாணத்திலும் ஏற்படுத்தப்படும் வளாகங் களில் விடுதி வசதி செய்து கொடுக்கவேண்டும். விரும்பிய வர்கள் அங்கு வசிக்கலாம். மற்றையவர்கள் வெளியிலி ருந்து வரலாம். பேராதனை யில் இப்பொழுதிருப்பதுபோல் மாணவர் விடுதியிலேயே வசிக்கவேண்டுமென்றும் சட்ட மிருக்கலாம். ஆனால் கண்டிப் பிரதேசத்தில் வசிப்பவர்கள் வெளியிலிருந்து வருவதற்கு அனுமதி வழங்க வேண்டும். (419)

4. ஒருசிலர் இன அடிப் படையில் மாணவர்களுக்கு பரீட்சைகளில் சலுகை காட் டப்படுவதாகப் பிரஸ்தாபித்த னர், ஆனால் அக்கூற்றுக்கு ஆதாரம் காட்டவில்லை. சில பீடங்களில் ஓர் இனத்தைச் சேர்ந்த மாணவர் அதிகமாக இருப்பதைச் சுட்டிக்காட்டி னர். இத்துறைகளில் இவ்வின த்தைச் சேர்ந்த மாணவர் களுக்கு இயற்கையான ஆற்ற லிருக்கலாம். (100, 101)

5. லண்டன் பரீட்சைகள் நிறுத்தப்பட்டபடியால், வெளியிலிருந்து பரீட்சை எடுத்து கல்வியில் முன்னேற முடியாத நிலையில் பலர் இருக் கின்றனர். ஆகவே இலங் கைச் சர்வகலாசாலை வெளி மாணவர்களுக்கும் பரீட்சை நடத்த வேண்டும். வெளியிலி ருந்து சித்தியெய்தியவர்களும் சர்வகலாசாலையிலிருந்து சித் தியெய்தியவர்களும் சமமாகக் கணிக்கப்படவேண்டும்.

(423, 683)

பேராசிரியர் சட்டர்ஜி தமிழ்ப் பல்கலைக்கழகத்தைப் பற்றி பின்வருமாறு கூறியுள் ளார். ''வித்தியாலங்கார, வித்தியோதய பிரிவேனுக்கள் பூரண பல்கலைக்கழகங்களாக ஆக்கப்பட்டால் தமிழர் பண் பாட்டிற்கும், சமயத்திற்கும், தத்துவசாத்திரத்துக்கும் விசேட இடமளி கொடுக்கும் ஒரு தமிழ்ப்பல்கலைக்கழகத்தை நிறுவுவதற்கு ஆவன செய்யா மலிருப்பது நீதியாகாது.'' (பக்கம் 359)

செனிவரத்தின தாம் எழு திய குறிப்புக்களில் சர்வகலா சாலை அனுமதிக்கு விகிதா சார முறையை (Quotas) ஆதரித்தும் காலியிலும் வளா கம் அமைத்தால் தான் யாழ்ப்பாணத்தில் வளாகம் அமைக்கப்பட வேண்டு மென்றும் கூறியுள்ளார்,

செனிவரத்தின கடைசியா கக் கூறியிருப்பது, பரீட்சை களில் சித்தியெய்திய மாண வர் எல்லோரும் பட்டம் பெறுமுன் அரசகருமமொழி யில் ஆருந்தரமாவது சித்தி யெய்த வேண்டுமென்பதாம்.

இனத்துவேஷமுள்ளவர்க ளின் கிளர்ச்சியினால் நீட்காப் கமிஷனின் அறிக்கையை அர சாங்கம் அங்கீகரிக்கவில்லை.

## கல்வியில்

## சமத்துவம்

கே. எச். எம். சுமதிபாலா என்பவர் தாமெழுதிய இலங் கையில் கல்விவளர்ச்சியின் சரித்திரம் என்னும் நூலில் பின்வருமாறு கூறுகிறார்.

''இப்பொழுது எல்லாப் பிரஜைகளுக்கும் கல்வித்துறை யில் சமவாய்ப்பு ஏற்பட்டுள் ளது. ஆனால் விஞ்ஞானக் கல்வியைப் பொறுத்தவரை யில் இன்றும் சம வாய்ப்பு ஏற்படவில்லை. இலங்கைச் சர்வகலாசாலையில் விஞ்ஞா னப்பகுதியில் படிக்கும் சிங் கள, முஸ்லிம் மாணவர்க

ளின் தொகை குடிசனத் தொகைப்படி அவர்களுக்கு இருக்கவேண்டிய தொகையில் குறைவாகவேயிருக்கிறது.'' [பக்கம் 414] இதற்குயார் பொறுப்பென்பதுதான் கேள்வி. 1931-ம் ஆண்டில் டொனமூர் அரசியல் முறை நடைமுறைக்கு வந்த காலந் தொடங்கி இற்றைநாள்வரைக்கும் கல்வி மந்திரிகளாகச்சிங்களவர் அல்லது அவர்களுக்கு வேண்டியவற்றைச் செய்ய ஆயத்தமாயிருந்த முஸ்லிமுமே இருந்திருக்கிறுர்கள். ஆட்சியிலிருந்த அரசாங்கங்கள் எல்லாம் சிங்கள மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட அரசாங்கங்களே. இக்காலத்தில் தென்னிலங்கையில் விஞ்ஞானக் கல்வியை நன்கு பரப்பி இருக்கலாம். அதற்குத் தடை செய்வார் ஒருவருமிருக்கவில்லையே. இவ்வளவு வசதிகளிருந்தும் தமது கடமையைச் செய்யாதிருந்துவிட்டு தமிழ் மக்கள்மீது வன்மம் சாதிப்பது தர்மமாகுமா?

மாறிவரும் மாணவ சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் முறையில் பேராதனைச் சர்வகலாசாலை அமையவில்லை யென்பதை நீட்காம் கமிஷன் நன்கெடுத்துக் காட்டியுள்ளது. "பெருகிவரும் மாணவர் தொகைக்கேற்ப சர்வகலாசாலையில் வசதி செய்து கொடுக்க வேண்டிய அவசியத்தை நமக்குமுன் சாட்சியம் அளித்தவரெல்லோரும் வற்புறுத்தியுள்ளனர். பேராதனைச் சர்வகலாசாலைக்குத் திட்டம் போட்டவர்கள் திறமைசாலிகளுக்கு (Elite) கல்வி கொடுப்பதையே மனதில் வைத்திருந்தனர். இலவசகக் கல்வி மூலமும் சுயபாஷைக் கல்வி மூலமும் வறிய குடும்பங்களிலிருந்தும் பெருந்தொகையான மாணவர் சர்வகலாசாலைக் கல்விக்குத் தகுதியுடையவர்களாய் வரும் இக்காலத்தில் அப்படி ஒரு கொள்கை பயனற்றதாகும். மாணவர்கள் விடுதியிலிருந்தே கல்வி கற்க வேண்டுமென்னும் கொள்கையைக் கடைப்பிடித்தால், சர்வகலாசாலையை நாடிவரும் மாணவர்களின் ஒரு சிறு தொகையினர்க்கும் அக்கல்வியை கொடுக்க முடியாமலிருக்கும்.'' இப்படிக் கூறிவிட்டு, மறுதேசங்களோடு ஒப்பிடும் போது, சர்வகலாசாலைக் கல்விக்கு வசதி செய்து கொடுப்பதில் இலங்கை மிகவும் பின்தங்கியிருப்பதைக் காட்டியுள்ளார். (பந்தி 364, 372)

## இந்தியாவின் முன்மாதிரி

நமது அயல் நாடாகிய இந்தியாவில் சர்வகலாசாலைக்கல்வி 1956-ம் ஆண்டுக்கும் 1975-ம் ஆண்டுக்குமிடையில் எவ்வாறு வளர்ந்திருக்கிற தென்பதைப் பின் வரும் புள்ளிகள் நன்கு காட்டுகின்றன.

| சர்வகலாசாலைகளின்தொகை | |
|---|---|
| 1956 | 33 |
| 1975 | 111 |

| கல்லூரிகளின்தொகை | |
|---|---|
| 1956 | 1004 |
| 1975 | 4338 |

கல்லூரிகளென்பன சர்வகலாசாலைகளோடு இணைக்கப்பட்ட கல்லூரிகளாகும். (Affliated colleges). இந்தியாவில் சர்வகலாசாலைக் கல்வி இணைக்கப்பட்ட கல்லூரிகள் மூலமே வளர்ந்துள்ளது. சென்னை நகரிலுள்ள கல்லூரிகள் எத்தனை? ஆண்களுக்கென இறிஸ்

தவக் கல்லூரி, பச்சையப்பன் கல்லூரி, லொயலாக்கல்லூரி விவேகானந்தர் கல்லூரி என்பன சில, பெண்களுக்கென கிறிஸ்தவ பெண்கள் கல்லூரி, மெரிஸ்ரெலாக்கல்லூரி, எஸ். ஐ. ரி. ரி கல்லூரி போன்ற பலவுள்ளன. ஆண்களுக்கென மேலே குறிப்பிடப் பட்ட சில கல்லூரிகள் இப் பொழுது சுயமாக இயங்கக் கூடிய (Autonomous) தகைமையைப் பெற்றுள்ளன. இலங்கையில் பல்வேறு நிலையிலுள்ள கல்விக்கும் அரசாங்கமே பொறுப்பேற்றுள்ளது. இதனால் இந்தியாவைப்போல் தனியார் நிறுவனங்களின் (Priavte Institutions) உதவியைப் பெறமுடியாமலிருக்கிறது. இப்பொழுது பொருளாதாரத்துறையில் பெருமாற்றங்கள் ஏற்பட்டு தனியார் துறையினருக்கு விசேஷ இடமும் சலுகைகளும் கொடுக்கப் பட்டு வருகின்றன. இதற்கு சுதந்திர வர்த்தக வலயம் Free Trade Zone; ஓர் உதாரணமாகும். பொருளாதாரத் துறையில் தனியார் உதவியைப் பெறும் அரசாங்கம் கல்வித்துறையில், சிறப்பாக உயர் கல்வித்துறையிலாவது, தனியாரின் உதவியைப் பெறலாமே. அப்படிச் செய்யாவிட்டால் இலங்கையின் சர்வகலாசாலைத் தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத போல் காணப்படுகிறது. இவ்வாண்டு உயர்தர பொதுத்தராதரப் பரீட்சைப் பேற்றின்படி 18.000 மாணவர் சர்வகலாசாலைக் கல்வி பெறத் தகுதியுடையவர்களாகக்காணப்பட்டுள்ளனர். இலங்கையின் சனத்தொகையை (140,00,000) நோக்கும் போது 18, 000 மாணவர்தொகை கூடியதல்ல. இத்தொகையில் எல்லா வளாகங்களிலும், புதிதாகதாபிக்கப் பட்டவற்றையும் சேர்த்து. 5000 மாணவர்களையே அனுமதிக்கக்கூடியதாக விருக்கிறது. இப்படி ஒரு சிலருக்கே அனுமதி கொடுப்பதினாலேயே கோட்டாக்கள் (Quotas) தரப் படுத்தல் முதலிய விரும்பத்தகாத முறைகள் கையாளப் படுகின்றன.

## இடநெருக்கடி

பேராதனைச் சர்வகலாசாலையில் இடநெருக்கடி காரணமாக ஏற்பட்ட விளைவுகள் சில வற்றை இனிக் கவனிப்பாம். விஞ்ஞானம், வைத்தியம் பொறியியல் முதலிய துறைகளுக்கு விஞ்ஞானகூட வசதிகளுக்கேற்பவே (Laboratory Facilities) மாணவரை அனுமதிக்க முடியும். ஆனால் கலைத் துறையிலிப்படிஒருகட்டுப்பாடு அத்தியாவசியமில்லையெனக் கருதப்பட்டது. வகுப்பறைகளோ விரிவுரை மண்டபங்களோ கொள்ளக்கூடிய மாணவர்களைச் சேர்கலாம் என்னும் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது. 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பேராதனையில் ஒரு பயங்கரமான மாணவர் வேலை நிறுத்தம் நடைபெற்றது. அதைப்பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி என். டி. எல்., விசய சேகரா என்பவர் நியமிக்கப் பட்டார். அவர் அறிக்கையின் படி இடவசதியைக் கவனிக்காது பெருந் தொகையான மாணவரை அனுமதித்ததே வேலைநிறுத்தத்துக்கு முக்கிய காரணமாகும். அரசாங்க கேள்விப்படி பெருந்தொகையான மாணவரை அனுமதித்த உபவேந்தரையும் செனெற் சபையையும் விசயசேகரா கண்டித்துள்ளார். 1955-ம் ஆண்டு தொடக்கம் உபவேந்தராயிருந்த சேர். நிக்கொலாஸ்,

அட்டிகலே ஓர் அரசியல் வாதியுமாவர். இதனுலேயே அரசாங்கத்தார் விருப்பத்துக்கு இணங்கினுர். விசய சேகரா அறிக்கையில் 1961-ம் ஆண்டில் 1766 ஆக இருந்த மாணவர் தொகை 1965-ம் ஆண்டில் 5069 ஆகமாறிய விபரங்கள் 28-ம் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த 5089 மாணவரில் 2840 பேருக்கு மாத்திரமே விடுதிகளில் இடம் கொடுக்கப்பட்டது. மற்றைய 2229 பேரும் வளாகத்தில் பேராசிரியர், விரிவுரையாளர், வளாக உத்தியோகத்தர், பணியாட்கள் முதலியோரின் இல்லங்களில் தங்க நேர்ந்தது. ஒரு பணியாளரின் சிறு வீட்டில் ஆறு மாணவர்கள் வசித்து வந்ததை தாம் கண்டதாகக் கமிஷனர் கூறியுள்ளார். மேலே குறிக்கப்பட்ட 5069 மாணவரில் 3378 பேர் கலை, கீழைத்தேச பண்பியல் முதலிய துறைகளிலும், மிகுதி 1691 பேர் விவசாயம், விலங்கியல், வைத்தியம் பொறியியல், விஞ்ஞானம் முதலிய துறைகளிலும் படித்தார்கள்.

## அஸ்வ வித்தியாலயம்

1963-ம் ஆண்டில் கலைப்பிரிவில் மேலும் கூடிய மாணவரைச் சேர்க்க வேண்டியிருந்தபடியால், கொழும்பு வளாகத்திலும் ஒரு கலைப்பீடம் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டில் கலைப்பீடத்தில் கொழும்பு வளாகத்தில் 559 மாணவரும், பொரளை வளாகத்தில் 991 மாணவரும் சேர்க்கப்பட்டனர்.

1964-ம் ஆண்டு உயர்தர பொதுத்தராதரப் பரீட்சையின் முடிவு வெளிவந்ததும் 1963-ம் ஆண்டிலும் பார்க்க பெருந்தொகையான மாணவர் கலைப்பிரிவில் சேர்வதற்குத் தகுதியுடையவராகக் காணப்பட்டனர். இவர்களையெல்லாம் பேராதனையிலும் கொழும்பிலும் சேர்ப்பதற்கு இடவசதியிருக்கவில்லை. இச்சந்தர்ப்பத்தில்தான் அரசாங்கத்தின் அனுசரணையோடு தகுதி பெற்ற மாணவர்களை யெல்லோரையும் அனுமதிப்பதெனத் தீர்மானித்து, கொழும்பிலும், பேராதனையிலும் சேர்க்கமுடியாதவர்களுக்குக் கொழும்புக் குதிரைப்பந்தயத் திடலில் வகுப்புகள் நடத்த ஒழுங்குசெய்யப்பட்டது. இதனுல்தான் இதற்கு அஸ்வ (குதிரை) வித்தியாலயமென்னும் பெயர் ஏற்பட்டது. வகுப்புகள் அங்குள்ள கலரிகளில் நடைபெற்றன. மாணவர் பெருந்தொகையாக இருந்தபடியால் விரிவுரைகள் ஒலிபெருக்கி மூலம் நடத்தப்பட்டன.

ஆதியில் இராமநாதன், சுவாமி விபுலானந்தர் கூறிய ஆலோசனைகளுக்கும் பின்னர் டாக்டர் நீட்காம் வற்புறுத்திய ஆலோசனைகளுக்கும் செவிசாய்த்து கொழும்பிலும், யாழ்ப்பாணத்திலும் வளாகங்களோ அல்லது சர்வகலாசாலைகளோ ஏற்படுத்தியிருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்காது. மேலும் தென்னிலங்கையில் விஞ்ஞானக்கல்விக்குப் போதிய வசதி கொடுத்திருந்தால், பெருந்தொகையான மாணவர்கள் கலைப்பகுதியில் சேரநேர்ந்திராது.

## ஆசிரியர்-மாணவர் உறவு

ஆசிரியர் மாணவர் உறவைப்பலப்படுத்துவதற்காகவே மாணவர்களெல்லோரும் விடுதிச்சாலைகளில் வசித்துக் கல்வி கற்கவேண்டுமென்னும் நிபந்தனை ஏற்படுத்தப்

பட்டது. இதற்காகவே பேராதனையில் ஆசிரியர்களுக்கு வீடுகளும் மாணவர்களுக்கு விடுதிகளும் (Halls of Residence) அமைக்கப்பெற்றன. இம்முறையால் பழைய குருகுல முறையைக் காலத்துக்கேற்ற ரீதியில் அமைத்துள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. குருகுல முறையின் சிறந்த அம்சம் குருவுக்கும் சீடனுக்குமிருக்கும் நெருங்கிய உறவாகும். இவ்வுண்மையை பின்வரும் சாந்தி சுலோகத்திலிருந்து அறியலாம். இது பாட ஆரம்பத்திலும் முடிவிலும் ஓதப்படுவது 'ஓம். குரு சிஷ்யர்களாகிய இருவரையும் சேர்த்துப் பிரம்மம் காப்பாற்றட்டும். சேர்த்துப் போஷிக்கட்டும். இருவரும் சேர்ந்து வீரியத்துடன் உழைப்போமாக. எங்கள் அத்தியனம் ஒளிபொருந்தியதாக வேண்டும். நாங்கள் ஒருவரை ஒருவர் பகைத்துக்கொள்ளாமலிருக்கவேண்டும்.

'ஓம் சாந்தி, சாந்தி சாந்தி.' மேற்கூறிய இலட்சியங்களை மாணவரும் ஆசிரியரும் மனதில் வைத்துக்கொண்டால் அவர்கள உறவு எவ்வளவு உன்னதமானதாயிருக்கும்.

பேராசிரியர்களே இக்காலத்துப் பிராமணர்களாயிருக்க வேண்டுமென்று' அறிஞர்கள் கருதுகிறார்கள். இரண்டாம் உலக யுத்தகாலத்தில் ஓர் அமெரிக்கப் பேராசிரியர் தாம் போர்முனைக்குப் போகப் போவதாக கலாயோகி ஆனந்தகுமாரசுவாமியிடம் கூறினார். அதற்கு அவர் (கலா யோகி) பின்வருமாறு கூறினார் 'யுத்தம் செய்வது சத்திரியன் தொழில் நீர் ஒரு பிராமணன், உமது தர்மம் கற்றலும் கற்பித்தலும் (ஓதல் ஓதுவித்தல்) நீர் போருக்குப் போவது தர்மமாகாது' பேராசிரியர்களின், விரிவுரையாளர்களும் மேற்கூறியவற்றை மனதில் வைத்திருப்பது நலம்.

மேலே எடுத்துக்காட்டப்பட்டமாதிரி உறவு ஒரு சிறிதளவேனும் பேராதனையில் நிலவவில்லையென அங்கிருந்த நிலையை ஆராய்ந்த பலரும் கூறியுள்ளனர். நாம் முன்பு குறிப்பிட்ட விசயசேகரா என்பவர் இவ்விஷயமாகத் தமது அறிக்கையில் கூறியிருப்பதுபின்வருமாறு; "பேராதனைச் சர்வகலாசாலை பல வருடமாக நடைபெற்ற விவாதத்தின் பின்னர் நிறுவப்பட்டது. இது அரசியலுக்கப்பால் சுதந்திரமாக இயங்கவேண்டுமென்று கருதப்பட்டது. இங்கு 1000 மாணவர் (ஆண்களும் பெண்களும்) வரையில் வசித்துக் கல்வி கற்கவேண்டுமென்று இதனை நிறுவியவர் கருதினர்.

இச் சூழலில் வசிக்கும் மாணவர் தங்கள் முழு நேரத்தையும் கல்வி கற்பதில் செலவழித்து சிறந்த பண்புள்ள கல்விமான்களாக உருவாகி நாட்டுக்கு வழிகாட்டக்கூடிய தலைவர்களாக பிற்காலத்தில் விளங்குவார்களென எதிர்பார்க்கப்பட்டது. இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கு ஆசிரியர் தங்களை அர்ப்பணிப்பார்களென்றும் நம்பிக்கை இருந்தது. இதற்காகவே இவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்கப்பட்டது. ஆனால் இதுவெல்லாம் வீண் கனவாய்ப்போய்விட்டது— மாணவர் கல்வி விஷயமாகவும், தங்கள் சொந்தப்பிரச்சினைகள் சம்பந்தமாகவும் ஆசிரியர்களை தொடர்புகொள்ள வசதிசெய்வதற்காகவே ஆசிரியர்களுக்கு இருப்பிடவசதி செய்துகொடுக்கப்பட்டது. என்னைச் சந்தித்த ஆசிரியரெல்லோரும் தங்கள் பிரச்சினைகளைப்பற்றி எடுத்துக் கூறினார்களேயொழிய மாணவர் பிரச்சினைகளைப்பற்றி எடுத்

துக் கூறவில்லை-ஓர் ஆசிரியரா வது ஒரு மாணவனைத் தமது வீட்டுக்கழைத்து உபசரித்ததா கத் தெரியவில்லை. ஆசிரியர்க ளுக்கும் மாணவர்களுக்கும் ஒரு வித தொடர்புமிருக்கவில்லை.''

இப்படியான சூழ்நிலையில் மாணவர் வேலைநிறுத்தம், ''ராகிங்'' போன்ற பிழை யான வழிகளில் இட்டுச்செல் லப்பட்டதில் அதிசயமில்லை.

## சர்கலாசாலைப் பரீட்சைகள்

இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பிலிருந்து இயங்கி வரும் வரைக்கும் சூழ்நிலை சுமுகமாயிருந்ததைக் கவனித் தோம். சர்வகலாசாலை பேரா தனைக்கு மாற்றப்பட்ட காலந் தொடங்கி இனத் துவேஷம் வளர்ந்து வந்ததையும் கண் டோம். இதற்குரிய காரணங் களையும் குறிப்பிட்டிருந்தோம். முக்கிய காரணம் அரசியலில் ஏற்பட்ட மாற்றமாகும். 1956ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலை எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா இன, மத அடிப்படையில் நடத்தி னார். பௌத்த கமிஷன் அறி க்கை பிரசாரத்திற்குத் தீவிர மாக உபயோகிக்கப்பட்டது. இந்த அறிக்கை, இலங்கையில் பௌத்த மதத்தைச் சேர்ந்த சிங்களவர் பெரும்பான்மை யாக இலங்கையிலிருந்தபோதி லும் அவர்களுக்கு முப்படை களிலும், அரசாங்க சேவை யிலும், கல்வித்துறையிலும் போதிய இடம் கிடைக்க வில்லையெனச் சுட்டிக்காட்டி யுள்ளது. பண்டாரநாயக்கா அரசாங்கம் தனிச் சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந் தது சர்வகலாசாலையையும் பாதித்தது பேராசிரியர் மயில்வாகனம் பேராதனைச் சூழ்நிலை தமிழர்களுக்குப் பாத கமாயிருந்ததை எடுத்துக் காட்டியுள்ளார். இக்காலத் தில்தான் தமிழ்ப் பல்கலைக் கழக இயக்கம் தோன்றியது.

இலங்கைச் சர்வகலாசாலை கொழும்பில் இயங்கி வந்த காலத்தில் பரீட்சைகளில் யாருக்கேனும் சலுகை காட் டியதாகக் கூறப்பட்டதாகத் தெரியவில்லை. ஆனால் இப் பொழுது உபவேந்தர் சிறி வர்த்தன, மத்தியு மூலம் பாராளுமன்றத்தில் சமர்ப் பித்த சத்தியக் கடுதாசியில், பேராசிரியர் குலசேகரம், பேராசிரியர் மயில்வாகனம், பேரசிரியர் கந்தையா போன் றவர்கள் தமிழர்களுக்குச் சலுகை காட்டியதாகக் குற் றஞ்சாட்டியுள்ளார் இரசா யனஇயல் பேராசிரியர் பத விக்கு சிறிவர்தனவும், தமி ழரான டாக்டர் தேவானந்த னும் போட்டியிட்டபொழுது பேராசிரியர் மயில்வபகனத் தின் ஆதரவினாலேயே சிறி வர்த்தன பேராசிரியரானார். இப்படியிருந்தும் பேராசிரியர் மயில்வாகனம் தமிழர்களுக் குச் சலுகை காட்டினாரெனக் கூசாமல் சிறிவர்த்தன கூறி யுள்ளார். [பாராளுமன்ற விவாதங்கள் [Hansard] தொகுதி-1 இலக்கம் 10.7.11 78 பக்கம் [491].

## கண்டிச் சிங்களவர் கிளர்ச்சி

1959ம் ஆண்டில் நியமிக் கப்பட்ட நீட்காம் கமிஷன் முன் தமிழ் மாணவர்களுக்கு பரீட்சைகளில் சலுகைகள் காட்டப்பட்டதாகக் கூறப் பட்டதையும், அவர்கள் அதை ஏற்காததையும் குறிப்பிட் டிருந்தோம். ஆனால் போகப் போகத் தமிழ்மாணவர் நிலை மோசமாகிவந்தது, 1969ம் ஆண்டின் பொறியியல்துறை

க்கு அனுமதிக்கப்பட்ட மாணவரில் சிங்களவரும் தமிழரும் சரிசமமாக இருந்தனர். 1970/71ம் ஆண்டில் பரீட்சை முடிவுகள் வெளிவந்ததும் மாணவருக்கு அனுமதிப்பத்திரங்களும் அனுப்பப்பட்டன. இப்பரீட்சையில் பொறியியல் துறையில் 100 தமிழ் மாணவரும் 50 சிங்கள மாணவரும் சித்தியெய்தினர். இதனைக் கண்ட கண்டிச் சிங்கள வாலிபர் முன்னணி இப்பரீட்சைப் பேறுகளை எதிர்த்துப் பிரசாரம் செய்தனர். இதனால் அரசாங்கம் இனக்கலவரம் வரக்கூடுமென அஞ்சியது. அரசாங்கம் மாணவர்களுக்கு அனுப்பிய அனுமதிப்பத்திரங்களை நிறுத்திவைத்தது. சிங்கள மக்களின் கிளர்ச்சியை நிறுத்துவதற்குச் சிங்கள மாணவரின் தொகையைப் பொறியியல் துறையிலும் வைத்தியத்துறையிலும் கூட்டுவதே வழியெனத் தீர்மானித்தது. இதற்குப் பொறியியல்துறை, வைத்தியத்துறையில் அனுமதிகோரும் சிங்கள மாணவரின் புள்ளிகளைக் குறைப்பதும், தமிழ்மாணவரின் புள்ளிகளைக் கூட்டுவதுமே வழியெனத் தீர்மானிக்கப்பட்டது பொறியியல்துறையில் அனுமதிக்கப்படும் சிங்கள மாணவரின் கூட்டுத்தொகை குறைந்தது 227 என்றும் தமிழ் மாணவரின் கூட்டுத்தொகை 250 என்றும் தீர்மானிக்கப்பட்டது. இதன்படி தமிழ் மாணவர் 23 புள்ளிகள் கூடப் பெறவேண்டியிருந்தது இப்படி மாற்றஞ்செய்யப்பட்டதால் அனுமதிபெறும் சிங்கள மாணவர் தொகை 50லிருந்து 89 ஆகக் கூடியது. தமிழ் மாணவர் தொகை 100லிருந்து 58 ஆகக் குறைந்தது. இதுபோலவே வைத்தியப் பகுதியில் அனுமதிபெறும் சிங்கள மாணவர் தொகை 137 ஆகக் கூட்டப்பட்டுத் தமிழ் மாணவரின் தொகை 103ஆகக் குறைக்கப்பட்டது. வைத்தியத்துறைக்குச் சேரும் சிங்கள மாணவருக்குக் குறைந்த புள்ளி 229 என்றும் தமிழ் மாணவருக்கு 250 என்றும் மாற்றப்பட்டது. 1970/71 ஆண்டில் தரப்படுத்தலோ, பிரதேச அடிப்படை முறையோ கையாளப்படவில்லை, சிங்கள தமிழ் மாணவரில் எத்தனைபேர் அனுமதிக்கப்படவேண்டுமென்று தீர்மானித்துவிட்டு. அதற்கேற்ப புள்ளிகள் சரிப்படுத்தப்பட்டன (Adjust). இதனால் முதலில் அனுமதிப்பத்திரங்கள் பெற்ற தமிழ் மாணவர் பலர் ஏமாற்றமடைந்தனர். இச்சூழ்நிலையில்தான் தமிழ் இளைஞர் பேரவை ஆரம்பமானது.

முன்பு குறிப்பிடப்பட்ட கண்டி வாலிப முன்னணியினர் தமிழ் மாணவருக்கு 1970-ம் ஆண்டு நடைபெற்ற பொறியியல் பரீட்சையில் கூடிய புள்ளிகள் கொடுக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினர் இக்குற்றச்சாட்டை விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி பொறியியல் பேராசிரியர் ஓ. இ. பெரேரா தலைமையில் விசாரணைக்குழு உபவேந்தரால் நியமிக்கப்பட்டது. இவ்விசாரணைக்குழு தீவிர விசாரணை செய்து குற்றச்சாட்டுக்கு ஓர் ஆதாரமுமில்லையெனத் தெரிவித்தது. பின்னர் தமிழ் மாணவர்களுக்குச் செய்கை முறைப் பரீட்சையில் (Practical Examination) தமிழ் விரிவுரையாளர்கள் உதவிசெய்து வருகிறார்களெனக் குற்றஞ்சாட்டப்பட்டது. இதையும் அவர்களால் நிரூபிக்கமுடியவில்லை. ஆனால் 1971-ம் ஆண்டு தொடக்கம் செய்கைமுறை பரீட்சை நிறுத்தப்பட்டது.

## மொழிவாரித் தரப்படுத்தல்

1971/72-ல் என்னமுறை கையாளப்பட்டதென்று தெரியவில்லை. ஆனல் அவ்வாண்டில் எட்டுச் சிங்கள மாணவருக்கு ஒரு தமிழ் மாணவரென்ற முறையில் அனுமதி வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இவ்வாண்டிலும் தரப்படுத்தல் உபயோகப்படுத்தப்பட்டிருக்க வேண்டும், ஆனல் இதனை வெளிப்படையாகக் கூறவில்லை.

1973-ம் ஆண்டிலேயே வெளிப்படையாக அரசாங்கம் தரப்படுத்தலை உபயோகித்தது. 1970-ம் ஆண்டில் போல் இன அடிப்படையில் அனுமதி வழங்கப்படவில்லையென்பதைக் காட்டுவதற்காகவே தரப்படுத்தல் பிரதேச அடிப்படை முதலியன கையாளப்பட்டன. தரப்படுத்தல் எப்பொழுதுமே ஒரு பிரச்னைக்குரிய விஷயம். அதனைப் பரீட்சைகளில் உபயோகப்படுத்துவது பற்றி நிபுணர்கள் அபிப்பிராயம் பலதன்மையாகவுள்ளது. ஆனல் இலங்கையில் கையாளப்படும் மொழிவாரித்தரப்படுத்தல் வேறெங்கும் கையாளப்படாத முறையாகும். மொழிவாரித் தரப்படுத்தல் தமிழ் மாணவரை எவ்வாறு பாதிக்கிறதென்பதை நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மு. சிவசிதம்பரம் அவர்கள் 30-11-74-ல் வெளியிட்ட அறிக்கையில் நன்கு விளக்கியுள்ளார்.

பிரதேச அடிப்படையில் அனுமதி செய்யும் முறை பெருந்தொகையான மாணவரை ஏ. எல். பரீட்சைக்கு அனுப்பும் மாவட்டங்களை அதிகம் பாதிக்கும். டாக்டர் சி. ஆர். டி. சில்வா 1974-ம் ஆண்டில் வெளியிட்ட கணக்கின்படி பிரதேச அடிப்படையில் யாழ்ப்பாணத்திலிருந்து 37 மாணவருக்கு ஒரு மாணவரும் கொழும்பு தெற்கிலிருந்து 29 மாணவருக்கு ஒரு மாணவரும், காலியிலிருந்து 19 மாணவருக்கு ஒரு மாணவருமே அனுமதி பெறுவர். இதனல் தகுதியுள்ள மாணவர் அதிகம் பாதிக்கப்படுவர்.

மந்திரி சிறில் மத்யூ சமீபத்தில் புதிய சர்வகலாசாலைச் சட்டம் விவாதிக்கப்பட்டபோது ஒரு விஷமத்தனமான பேச்சைப் பேசினர். இது பற்றி பின்னர் கவனிப்போம். இந்தப் பேச்சின் பொழுது 1977-ம் ஆண்டு தரப்படுத்தல் நடைமுறையிலிருந்த பொழுது வெளிவந்த சர்வகலாசாலைப் பிரவேசப் பேறுகளையும் 1978-ம் ஆண்டு தரப்படுத்தல் நீக்கிய பின் வெளிவந்த பேறுகளையும் கொடுத்துள்ளார். அதிலிருந்து தரப்படுத்தலை எடுத்ததால் சிங்கள மாணவரை எவ்வளவு பாதித்துள்ளது என்பதைக் காட்டியுள்ளார். அவர் காட்டிய 1978-ம் ஆண்டு பேறுகளைக் கொண்டு தரப்படுத்தலை யெடுத்தது தமிழ் மாணவர்களுக்கு எப்படி நன்மை செய்திருக்கிறதென்பதை நாம் அறியலாம்.

| கல்வித்துறை | போதனு மொழி | 1977 | | 1978 | |
|---|---|---|---|---|---|
| | | மாணவர் தொகை | விகிதாசாரம் | மாணவர் தொகை | விகிதாசாரம் |
| வைத்தியம் | சிங்களம் | 168 | 60% | 228 | 57% |
| | தமிழ் | 67 | 28% | 170 | 42.5% |
| பல்வைத்தியம் | சிங்களம் | 38 | 76% | 18 | 36% |
| | தமிழ் | 12 | 24% | 32 | 64% |
| மிருக வைத்தியம் | சிங்களம் | 19 | 63% | 14 | 49% |
| | தமிழ் | 11 | 37% | 15 | 50% |
| | ஆங்கிலம் | | | 1 | 3½% |
| பொறியியல் | சிங்களம் | 215 | 80% | 231 | 63% |
| | தமிழ் | 50 | 19% | 130 | 36% |
| | ஆங்கிலம் | 4 | 1% | 8 | 3½% |

1978-ம் ஆண்டில் தரப்படுத்தல் எடுக்கப்பட்டதாகக் கூறப்பட்ட போதிலும், தரப்படுத்தப்பட்டால் எவ்வளவு சிங்கள மாணவர் சேர்க்கப்படுவாரோ அவ்வளவு சிங்கள மாணவர் சேர்க்கப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. இப்படிச் சிங்கள மாணவர் சேர்க்கப்பட்டதால். தகுதியான தமிழ் மாணவர் அனுமதி பெருமல் இருந்திருக்கலாம்.

தரப்படுத்தல் நடைமுறையிலிருந்த காலத்தில்(1960-77) தமிழ் மாணவர் பட்ட கஷ்டம் சொல்ல முடியாது. இக்காலத்தில் செலவாணிக் கட்டுப்பாடும் கடுமையாகவிருந்தபடியால், தமிழ் மாணவர் வெளிநாடுகளில் போய்க் கல்வி கற்றமுடியாமலிருந்தது. இதனுல் அவர்கள் பெரும் விரக்தியடைந்த நிலையிலிருந்தனர். இதுபோன்ற முன்னைய அரசாங்கத்தின் செயல்களே தனித்தமிழ் நாட்டுக்கொள்கைக்கு வித்திட்டதெனலாம். இக்கொள்கைக்கு இந்நாட்டிலும் வெளிநாட்டிலும் தமிழ் இளைஞரே பேராதரவு கொடுத்து வருகின்றனர்.

## மறுபடியும் தரப்படுத்தல்

இந்த ஆபத்தை உணர்ந்த ஐக்கிய தேசியக்கட்சி, சிறப்பாக அதன் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனு தரப்படுத்தலை நீக்கினுர். இப்பொழுது மறுபடியும் தரப்படுத்தலைக் கொண்டுவருவதற்கு மந்திரி சிறில் மத்தியூ தலைமையில் ஒரு பெரிய இயக்கம் தோன்றியுள்ளது. மத்தியூ இவ்விஷயத்தைச் சர்வகலாசாலைச் சட்ட விவாதத்தின் போதும், அரசாங்க வரவு-செலவு சம்பந்தமான விவாதத்தின்போதும் எழுப்பியுள்ளார். தமிழ் மாணவர் அனுபவித்துவரும் வசதிகளைப் பற்றி இவர் பின்வருமாறு கூறியுள்ளார்.

"நான் முன்பு கூறியிருப்பதுபோல் யாழ்ப்பாணத்தில் சர்வகலாசாலைப் பிரவேசப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்யும் மாணவருக்கு கட்டிட வசதி விஞ்ஞானகூட வசதி, நூல்நிலைய வசதிகள் போன்ற சகல வசதிகளுமுண்டு.

இவர்கள் ''ரியூஷன்'' பெறுவதற்கும் வசதியுண்டு. நமது நாட்டுப்புற மாணவர்களுக்கு இவ் வசதிகளில்லை.

நான் கல்வி மந்திரியை ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒரு சிறந்த விஞ்ஞான வசதியுள்ள உயர் நிலைப் பள்ளியைத் தாபிக்கும்படி கேட்டுள்ளேன். இப் பள்ளிக்கூடங்களில் சர்வகலாசாலைக் கல்விபெறத் தகுதியுள்ள நாட்டுப்புற மாணவர்களுக்கு ஒரு வருடப் பயிற்சி கொடுக்கலாம். நமது நாட்டுப்புற பள்ளிக் கூடங்களுக்கு விஞ்ஞானகூட வசதி செய்து கொடுப்பதென்ருல் 300, 400 வருடங்களாகும். இலவசக் கல்வி நடைமுறைக்கு வந்து 40 வருடங்களாகின்றன. இக்காலத்தில் விஞ்ஞானக் கல்விக்கு வேண்டிய வசதியைச் செய்து கொடுக்கவில்லை. ஆகவேதான் நான் ஒரு குறுகியகாலத் திட்டத்தைக் கூறினேன். மேலே கூறியது சிங்கள மாணவர் அனுபவித்துவரும் ஒரு குறைபாடு.

இன்னுமொரு குறைபாட்டை எனது சிங்களப் பேச்சில் குறிப்பிட்டுள்ளேன். தமிழ் மாணவருக்கு விரிவுரை நிகழ்த்துபவரே பின்னர் பரீட்சகர்களாகவிருந்து வினுத்தாள்களைத் தயாரிக்கிருர்கள். இது மாத்திரமன்றி, இவர்களே வினுத்தாள்களைத் திருத்துகிருர்கள். இப்படிச் செய்யும் பொழுது கூடிய புள்ளிகளைக் கொடுக்கிருர்கள்.''

(Hansard vol 1 No: 10 1-11-78 Page 1011)

யாழ்ப்பாணத்து மாணவர்களுக்கு இருக்கும் வசதிகளைப் பற்றி மத்தியூ குறிப்பிடும்போது திரு எம்.சிவசிதம்பரம் இடைமறித்து இவைகள் ஒன்றையும் அரசாங்கம் செய்து கொடுக்கவில்லை என்பதைச் சுட்டிக் காட்டினுர். நான் முன்பு விளக்கியது போல், யாழ்ப்பாணக் கல்லூரிகளெல்லாம் பெற்ருர், ஆசிரியர், பழைய மாணவர் முதலியோரின் முயற்சியாலும், தியாகத்தாலும் கட்டியெழுப்பப்பட்டவை. ஒரு கல்லூரியை கட்டியெழுப்புவதில் பணிபுரிந்தவன் என்றமுறையில் யாழ்ப்பாண மக்கள் தமது கல்லூரிகளை வளர்க்கப்பட்ட கஷ்டங்களை நான் நன்கறிவேன், விஞ்ஞானம் படிப்பிக்கத் தகுந்த தமிழ்ப்பட்டதாரிகளிருந்தும் அவர்களை நியமிக்க முடியாமல் கல்விப்பகுதியார் முட்டுக்கட்டை போட்டனர். வசதிக்கட்டணப் பணத்திலிருந்தே அவர்களுக்கும் சம்பளம் கொடுக்க வேண்டியிருந்தது. விஞ்ஞான வகுப்பில் மாணவர் கூடினுல் மேலும் ஒருபிரிவை (division) வைப்பதற்கு கல்விப் பகுதியாரின் உத்தரவைப்பெற வேண்டும். அவ்வுத்தரவு இலகுவில் கிடைக்காது. இவற்றையெல்லாம் சமாளித்துத்தான் யாழ்ப்பாணத்தில் விஞ்ஞானக் கல்வி வளர்ந்தது. இப்படி வளர்த்ததை மத்தியூ ஒரு குற்றமாகக் கருதுகிருரா?

யாழ்ப்பாணத்து மாணவருக்கு ''ரியூஷன்'' வசதியிருப்பதாக மத்தியூ குறிப்பிட்டுள்ளார். இந்த ரியூஷனைக்கொடுப்பதற்கு யாழ்ப்பாணப் பெற்ருேர் எவ்வளவு செலவு செய்கிருர்களென்பதை அவர் அறியமாட்டார். இப்பொழுது கல்வி இலவசமென்பது பெயரளவில்தான். நாட்கூலி வேலைசெய்து பிழைக்கும் பெற்ருேரும் தாங்கள் உண்பதையும், உடுப்பதையும் ஒறுத்து

தமது பிள்ளைகளுக்கு ரியூஷன் கொடுப்பதை நானறிவேன். யாழ்ப்பாண மக்களுக்குக் கல்வியே செல்வம். அதற்குத் தடையாயிருப்பவர்களை அவர்கள் ஒருபொழுதும் மன்னிக்க மாட்டார்கள்.

தமிழ் மாணவர்களுக்கு மாத்திரம்தானு விரிவுரையாளர்கள் பரீட்சகர்களாக விருப்பது? சிங்கள மாணவருக்கும் அவர்களே இருப்பதை இவர் அறியார் போலும்.

தமிழ் மாணர்களுடன் நேராகப் போட்டியிட முடியாதபடியாலேயே அவர்களுக்கு பரீட்சைக்களில் தமிழ்ப் பேராசிரியர், விரிவுரையாளர் சலுகை காட்டுகிறுர்களென்ற குற்றத்தைச் சுமத்தி வருகிறுர்கள். சில வாரங்களுக்குமுன் மந்திரி மதியூ உபவேந்தர் சிறிவர்த்தனுவிடமிருந்தும் இரு பேராசிரியர்களிடமிருந்தும் தமிழ் மாணவர்களுக்கு சலுகை காட்டப்பட்டிருப்பதாகச் சத்தியக் கடுதாசிகளைப் பெற்றுப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். சிறிவர்த்தனு யாழ்ப்பாணவளாகத்தில் பரீட்சைகள் ஒழுங்காக நடைபெறவில்லையென்று கூறினுர். பேராசிரியர் ஒருவர். ஏ. எல். விலங்கியல் விடைத்தாள்கள் சரியான முறையில் பார்வையிடப்படவில்லை என்று குற்றஞ் சாட்டினுர், விசேடமாக நுளம்பு சம்பந்தமான கேள்விக்கு அதிக புள்ளி கொடுக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. இன்று நுளம்புப் பிரச்னை பாராளுமன்றத்துக்குப் போய், நுளம்புப் படங்களும் பாராளுமன்ற வெளியீட்டில் (Hansard) இடம் பெற்றுள்ளன. இவ்வளவு அரும்பாடுபட்டு மதியூ கட்டிய கோட்டையை யாழ்ப்பாணவளாக ஆசிரியர்களின் அறிக்கையின் உதவியோடும், விலங்கியல் விரிவுரையாளர் ஒருவரின் உதவியோடும் திரு. மு. சிவசிதம்பரம் தகர்த்துள்ளார். திரு. சிவசிதம்பரம் தமிழ் மாணவர் உயர் கல்வி விஷயத்தில் எப்பொழுதும் விழிப்பாகஇருந்து செயலாற்றுவதை நாம் பாராட்ட வேண்டும்.

சன்சோனிக் கமிஷனுக்கு முன்னுல் சில வாரங்களுக்கு முன் தமிழ்க் கல்வி மான்கள் மீது பெரும் பழிகளைச் சுமத்திய உபவேந்தர் சிறிவர்த்தனு, சென்ற வாரம் அக்கமிஷனுக்குமுன் குறுக்கு விசாரணைக்குப் போகவில்லை. பாராளுமன்றத்தில் நடந்த விவாதத்தின் பின் இவருக்குப்புத்தி வந்துவிட்டது போலும். இவர் குறுக்கு விசாரணைக்குப் போகாதபடியால், இவர் முன்பு கூறிய சாட்சியம் நிராகரிக்கப்பட்டுவிட்டது.

இப்பொழுது சர்வகலாசாலை அனுமதி சம்பந்தமாகக் கல்விப் பகுதியார் ஒரு புது முறையை வெளியிட்டுள்ளார்கள். இம்முறைப்படி தகுதியடிப்படையில் 30%, பிரதேச அடிப்படையில் 55%, பின்தங்கிய இடங்களுக்கு 15 % அனுமதி வழங்கப்படும். இம்முறை யாழ்ப்பாணம், கொழும்பு, காலி முதலிய மாவட்டங்களிலுள்ள மாணவர்களைப் பெரிதும் பாதிக்கும். இம்முறை ஐக்கிய தேசியக் கட்சியின் தேர்தல் பிரகடனத்துக்கும் புதிய அரசியல் சாசனத்துக்கும் முரணுனதெனக் கூறப்பட்டுள்ளது. இவ்விஷயத்தில் விழிப்பாகவிருந்து ஆவன செய்யவேண்டியது தமிழ் மக்கள் கடமையாகும்.